

அருப்புக்கோட்டை சொக்கலிங்கபுரம் கிராம பகுதியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பொதுமக்களுக்கு வருவாய், பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் முன்னாள் சேர்மன் சுப்பாராஜ், சிவப்பிரகாசம், நகர செயலாளர் ஏ.கே.மணி, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்.ரமேஷ், துணை மேயர் பழனிச்சாமி, இளைஞர் அணி பாபுஜி ஆகியோர் உடன் இருந்தனர்.

# வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி தலைமையில் இன்று (06.12.2025- சனிக்கிழமை) மாலை 05.00 மணியளவில் வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. எனவே வேலூர் மாவட்ட தி.மு.க. விற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள்: 1. 14.12.2025 அன்று திருவண்ணாமலையில் கழகத் தலைவர் பங்கேற்கும் வடக்கு மண்டல இளைஞர் அணி மாநாட்டில் பங்கேற்பது.

2. SIR இறுதிக் கட்டப் பணிகள்

3. கழக ஆக்கப்பணிகள்.

**ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.**
செயலாளர்
வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க.

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு

# இளையான்குடி மேற்கு ஒன்றியம் சார்பில் 5000 பேர்களுக்கு அசைவ உணவு!

## கா.வெங்கட்ராமன் தலைமை! அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்குகிறார்!

சிவகங்கை, டிச. 6 -

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி மேற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று 6ம்தேதி மெய்யனேந்தல் அனியா கோட்டையில் மாபெரும் கபடி போட்டி நடைபெறுகிறது .நாளை 7ம்தேதி காலை 10 மணி அளவில் ஒன்றிய கழகச் செயலாளர் கா.வெங்கட்ராமன் தலைமையில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியரசன், செயற்குழு உறுப்பினர் அ.முகமது ,பொதுக்குழு உறுப்பினர் த.உதயகுமார், ஒன்றிய கழகசெயலாளர் ஆறு.செல்வராஜன் ,வே.தமிழ் மாறன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கே .எம். பொற்கோ, கே.எஸ்.மகாதீர் பரணி கிட்டு, கிங் கார்த்தி, ஆர். சேதுபதி ராஜா, எஸ்.எம். மதிவாணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது . 5000 பேருக்கு அசைவ விருந்து உணவினை மாவட்டக் கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் வழங்கி சிறப்புரையாற்றுகிறார். முன்னதாக ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் எம்.எம் .சௌந்தர் வரவேற்று பேசுகிறார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் இலக்கிய அணி புரவலர் மு.தென்னவன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள். பாலச்சந்தர் நன்றி கூறுகிறார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மேற்கு ஒன்றிய செயலாளர் கா.வெங்கட்ராமன் தலைமையில் ஒன்றிய கழக நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.

# நெல்லை மேற்கு மாவட்டத்தில் அ.தி.மு.க.- பா.ஜ.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் முன்னிலையில்!

நெல்லை, டிச. 6 –

நெல்லை மேற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நெல்லை மேற்கு மாவட்டம் ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பாப்பாக்குடி ஒன்றிய பா.ஜ.க. இளைஞரணி அமைப்பாளர் கருத்தப் பாண்டி, மற்றும் குத்தப்பஞ்சான் அ.தி.மு.க.வைச் சேர்ந்த (BLA2) அருள்மேகம் ஆகியோர் நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

திராவிட மாடல் முதலமைச்சர். கழகத் தலைவர் அன்புத் தளபதியார் அவர்களின் தலைமையை ஏற்றும்,

தீவிர சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தம் (SIR) தொடர்பாக நெல்லை மேற்கு மாவட்டத்தில் மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் மேற்பார்வையில் நடைபெற்று வரும் வாக்காளர் தீவிர திருத்தம் பட்டியல் குறித்து பாக முகவர்கள் (BLA2) பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA) ஆகியோர்களின் சிறப்பான பணியை தெரிந்து கொண்டு குத்தப் பஞ்சான் அ. தி.மு.க.பாக முகவர் (BLA2) அருள் மேகம்,பாப்பாக்குடி ஒன்றிய பா.ஜ.க இளைஞரணி அமைப்பாளர் கருத்தப்பாண்டி

ஆகியோர் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் ஆலங்குளம் தொகுதி பார்வையாளர் கணேஷ்குமார் ஆதித்தன், ஆலங்குளம் தெற்கு ஒன்றிய செயலாளர் சிவகுமார்,வி. கே.புரம் நகர செயலாளர் கி கணேசன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் பிரேம் ஆனந்த், கிளைச் செயலாளர் அன்பரசன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் சுந்தர், அம்பை நகர தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் சரவணன் சக்திவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திண்டுக்கல் மாவட்ட தொ.மு.ச. முன்னாள் செயலாளர்

# பெ.கருப்பையா மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

திண்டுக்கல், டிச. 6 -

திண்டுக்கல் மாவட்ட தொ.மு.ச. முன்னாள் செயலாளர் பெ.கருப்பையா மறைவெய்தினார். அவருக்கு கழக நிர்வாகிகள் நேரில் சென்று மரியாதை செலுத்தினர்.

திண்டுக்கல் மாவட்ட தொழிலாளர் முன்னேற்ற சங்கம் முன்னாள் மாவட்டச் செயலாளர் தமிழ்நாடு மின்வாரிய ஓய்வு பெற்ற பணியாளர் முன்னேற்றச் சங்கம் கௌரவ தலைவர்



பெ. கருப்பையா நேற்று கரூரில் மறைவெய்தினார்.

இவருக்கு கரூர் தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கே.குமரன் என்ற மகனும் நான்கு மகள்களும் உள்ளனர். அவரது இல்லத்தில் திண்டுக்கல் மாவட்ட கழக நிர்வாகிகள், திண்டுக்கல் மாவட்ட தொ.மு.ச. பேரவை கவுன்சில் நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர். அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு,

கரூர் வெங்கமேடு, வாங்கப்பாளையம், எம்.கே. நகர் 2வது குறுக்குச் சாலை அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.




மதுரை மாவட்டத்தில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒரு லட்சத்து 67 ஆயிரம் பேருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை தருவதை முன்னிட்டு 6ஆம் தேதி மாலை மதுரை விமான நிலையத்தில் மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் எழுச்சிமிகு வரவேற்பு கொடுப்பது மற்றும் ஏழாம் தேதி நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவினை சிறப்பாக நடத்துவது தொடர்பான வடக்கு மாவட்ட கழக செயல் வீரர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரை ஆற்றினார். உடன் கழக நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன் எம் எல் ஏ, எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியம், கருதியாகராஜன், தனச்செல்வம், வடிவேல் முருகன், புதூர் சேகர், நேருபாண்டியன், மதுரை பாலா, சுப.த.சம்பத், ஆனந்த், விஜய கதிரவன், ரோகிணி பொம்ம தேவன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் பங்கேற்றனர்.

### பழங்குடியின தொழில்முனைவோருக்கான

# முதலீட்டு உதவித் திட்டத்தில் தமிழ்நாடு முற்றிலும் புறக்கணிப்பு!

## நாடாளுமன்றத்தில் — ஈரோடு கே.இ. பிரகாஷ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, டிச.6-

பழங்குடியின தொழில் முனைவோருக்கான முதலீட்டு உதவித் திட்டத்தில் தமிழ்நாடு முற்றிலும் புறக்கணிப்பு எனவும், முதலீடு பெற்ற நிறுவனங்களும் தகுதியான நிறுவனங்களா என்பதில் சந்தேகம் என்றும், திட்டத்தை சரியாகவும், வெளிப்படையாகவும் நடைமுறைப்படுத்த எம்.பி. கே.இ. பிரகாஷ் வலியுறுத்தியுள்ளார்.

பழங்குடியின தொழில் முனைவோரை ஊக்குவிக்க முதலீட்டு உதவி வழங்கும் *Venture Capital Fund for Scheduled Tribes (VCFST)* புள்ளிவிவ ரங்கள் மற்றும் தமிழ்நாட்டுக்கு எந்த விதத்தில் அது பயனளித்துள்ளது ஆகியவை குறித்து, ஒன்றிய பழங்குடியின விவகாரங்கள் துறையிடம் நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ. பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

இதற்கு அதன் அமைச்சர் அளித்துள்ள பதில்கள், இந்த திட்டம் தமிழ்நாடு உட்பட பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பல மாநிலங்களை புறக்கணித்து வருவதையும், பயன்பெற்ற நிறுவனங்களின் நம்பகத் தன்மை குறித்து சந்தேகத்தையும் வெளிக்கொண்டு வந்துள்ளது.

உறுப்பினர் கே.இ.பிரகாஷ் எழுப்பிய கேள்விகள் வருமாறு:-

(a) VCFST திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து, இதுவரை இத்திட்டத்தின் கீழ் ஆதரவு பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை மாநில வாரியாக எவ்வளவு?

(b) VCFST திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவியின் அளவுடன் ஒவ்வொரு மாநிலத்திலும் ஆதரவு அளிக்கப்பட்ட புதிய நிறுவனங்கள் (Startups) அல்லது தொழில் முனைவோர் திட்டங்களின் விவரங்கள் மாநில வாரியாக என்ன?

(c) அதே காலகட்டத்தில் VCFST திட்டத்தின் கீழ் ஆதரவு பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(d) தமிழ்நாட்டைச் சேர்ந்த பயனாளிகளின் விவரங்கள், ஆதரவு அளிக்கப்பட்ட புதிய நிறுவனம்/ தொழில்முனைவோர் முயற்சி வகை மற்றும் ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவி விவரங்கள் மாவட்ட வாரியாக என்ன?

ஒன்றிய அமைச்சர் பதில்!

(a) & (b): VCFST திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை ஆதரவு பெற்ற பயனாளிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

சத்தீஸ்கர்:

பயனாளி: ஹேமல் ஃபுட் புராடக்ட் பிரைவேட் லிமிடெட் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவியின் அளவு: 3.41 கோடி

தெலங்கானா:

பயனாளி: ஹார்லீஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவியின் அளவு: 5.00 கோடி

(c) & (d): இன்றைய தேதி வரை VCFST திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநிலத்தில் எந்தப் பயனாளியும் இல்லை.

1. பல பழங்குடி மாநிலங்கள் புறக்கணிப்பு:

இந்த திட்டம் 2024 ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை, சத்தீஸ்கர், தெலங்கானா ஆகிய இரண்டே மாநிலங்களில், இரண்டு நிறுவனங்களுக்கு மட்டுமே நிதி உதவி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது கவலையும் அதிர்ச்சியும் அளிக்கக்கூடிய புள்ளி விவரம்.

வடகிழக்கில், மிசோரம், நாகாலாந்து, மேகாலயா, அருணாச்சல் பிரதேசம் ஆகியவை, பழங்குடி மக்களை பெரும்பான்மையாகக் கொண்டவை. இது போக, லட்சத்தீவுகள், தாத்ரா மற்றும் நகர் ஹவேலி ஆகிய யூனியன் பிரதேசங்களும் பழங்குடி பெரும்பான்மை கொண்டவை.

இந்த மாநிலங்கள் மற்றும் யூனியன் பிர தேசங்களில் கடந்த ஆண்டில் ஒரே ஒரே ஒரு நிறுவனம் கூட இந்த திட்டத்தில் பயன்பெறவில்லை. இதன் மூலம், ஒன்றிய அரசு இந்தப் பகுதிகளை முற்றிலுமாக புறக்கணித் துள்ளது என்பது



தெள்ளத்தெளிவாக தெரிய வருகிறது.

2. பயன்பெற்ற நிறுவனங்களும் தகுதியானவையா எனச் சந்தேகம்:

சத்தீஸ்கர், தெலங்கானா ஆகிய மாநிலங்களிலும், அங்கு இருக்கும் பழங்குடி மக்கள் தொகைக்கு ஏற்ப சரியான விகிதத்தில் நிறுவனங்கள் பயன் பெறவில்லை. சத்தீஸ்கரில், ஹேமல் ஃபுட் புராடக்ட் பிரைவேட் லிமிடெட் (Hemal Food Product Pvt Ltd.), தெலங்கானாவில் ஹார்லீஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (Harleys India Pvt. Ltd.) ஆகிய இரண்டு நிறுவனங் கள் மட்டுமே பயன் பெற்றுள்ளன.

இந்த இரண்டு நிறுவனங்களும் இயங்கி வருவதற்கான தடயங்கள் பொது வெளியில் காணக்கிடைக்கவில்லை. இதற்கான அதிகாரப்பூர்வ இணையதளங்கள், சமூக வலைதளப் பக்கங்கள் எதுவும் தென்படவில்லை. இரண்டும் அமைச்சகத்தின் தகவல்களின் படி, உணவுப்பொருள் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள். இவற்றின் தயாரிப்புப் பொருட்களைப் பற்றிய தகவலும் இல்லை.

இப்படிப்பட்ட முகமில்லா நிறுவனங்களுக்கு, 3.41 கோடி, 5 கோடி ரூபாய் (இது தான் உச்சபட்ச முதலீட்டு உதவித் தொகை) வழங்கியிருப்பது, திட்டத்தின் செயல்பாட்டின் மீது சந்தேகங்களை எழுப்புகிறது.

3. தமிழ்நாட்டிற்கு இதுவரை ‘பூஜ்ஜியம்’ பயனாளர்கள்:

தமிழ்நாட்டின் பழங்குடியினர் மக்கள் தொகை கிட்டத்தட்ட 8 லட்சம் ஆகும். இந்த எண்ணிக்கை குறைவு என்றாலும், தமிழ்நாடு தொழில்முனைவில் இந்தியாவிலேயே முன்னணியில் இருக்கும் மாநிலமாக திகழ்கிறது. தென்னிந்தியாவில் முதன் முறையாக 1 டிரில்லியன் டாலர்’ பொருளாதார இலக்கை அறிவித்து செயல்பட்டு வரும் மாநிலம். இத்துடன் *Startup TN* போன்ற பல திட்டங்களின் வழியே, மாநிலத்தின் அனைத்து மட்டங்களிலும் தொழில்முனைவு கனவை விதைத்துள்ளது.

பல பழங்குடியின தொழில்முனைவாளர்கள் தமிழ்நாட்டின் பழங்குடி மண்டலமான நீலகிரி, மற்றும் அதை ஒட்டிய கோவை பகுதிகளில் இருந்து, மாநில அரசு நடத்தும் தொழில்முனைவாளர் நிகழ்வுகளில் ஆர்வமுடன் கலந்துகொள்கிறார்கள். அங்கே அவர்களின் ஐடியாக்களையும், தயாரிப்புப் பொருட்களையும் முன்னிறுத்தி, தங்களது *Startup* நிறுவனங்களை விளம்பரப்ப டுத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில், இதுவரை தமிழ்நாட்டில் ஒரே ஒரு பழங்குடியின தொழில்முனைவாளரைக் கூட, ஒன்றிய அரசு திட்டத்தில் சேர்க்கவில்லை என்பது அதிர்ச்சி யளிக்கிறது. இதன் மூலம், தமிழ்நாட்டின் பழங்குடி தொழில்முனைவோருக்கு கிடைக்கவேண்டிய மறுக்கப்பட்டிருக்கிறது. நியாயமான ஆதரவு

இத்திட்டத்தின் செயல்பாட்டை, பழங்குடியினர் விவகாரங்கள் துறை, உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன். பழங்குடியினர் வசிக்கும் அனைத்து மாநிலங்களிலும் சமமான வளர்ச்சி ஏற்படும் வகையில் இத்திட்டம் இனி அமைய வேண்டும். பயன்பெறும் நிறுவனங்களின் நம்பகத் தன்மை சந்தேகத்துக்கு இடமின்றி இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

மேலும், இந்தியாவிற்கு பெரும் பொருளாதார பலத்தை அளித்து தொழில் முனைவு புரட்சியை வேகமாக நடத்தி வரும் தமிழ்நாட்டை புறக்கணிக்காமல் இங்கு இருக்கும் பழங்குடியின தொழில்முனைவோரை பயனாளர்களாக்க வேண்டும்.

இவ்வாறு கே.இ. பிரகாஷ் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.



தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. ஆலோசனைப்படி தேனி வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் அருள்வாசகன் ஏற்பாட்டில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு பள்ளிக் குழந்தைகளுக்கு பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினார். உடன் தேனி வடக்கு ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் பிரபாகர், தேனி வடக்கு மாவட்ட ஓட்டுனர் அணி துணைத் தலைவர் கருப்பசாமி வழக்கறிஞர் கண்ணதாசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், பிள்ளையார்நத்தம் எப்போதும்வென்றான் இடையே ரூ.4கோடி 50லட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்கும் பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்க்கண்டேயன் கொடியசைத்து துவக்கி வைத்தார். நிகழ்வில் உதவி கோட்ட பொறியாளர் ராஜபாண்டி, ஒன்றிய செயலாளர்கள் அன்புராஜன், ராமசுப்பு, சின்னமாரிமுத்து, ராதாகிருஷ்ணன்மாவட்டப் பிரதிநிதிகள் புதுராஜா, ஆதிசங்கர் துணைச் செயலாளர்கள் ராமசாமி, காளிராஜ் பாண்டியன், உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.